**செய்தி வெளியீடு எண் : 671** **நாள்: 26.04.2022**

## செய்தி வெளியீடு

### வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் 171ஆவது பிறந்த நாள் விழா

'வெள்ளுடை வேந்தர்' சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 171ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு நாளை (27.04.2022) காலை 9.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு, மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

திராவிட இயக்கத்தின் முன்னோடி மற்றும் நீதிக் கட்சியினைத் தோற்றுவித்த முப்பெருந்தலைவர்களில் ஒருவரான 'வெள்ளுடை வேந்தர்' சர்.பிட்டி. தியாகராயர் அவர்கள் அய்யப்பச் செட்டியார், வள்ளி அம்மாள் தம்பதியருக்கு 27.04.1852 அன்று மகனாகப் பிறந்தார். செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்திலே பிறந்து, சிறு வயது முதலே சீரிய கல்வி கற்று வழக்கறிஞர் என உச்சம் தொட்டு இருந்தபோதிலும், தனது தந்தை சார்ந்த நெசவு உள்ளிட்ட பல தொழில்களில் ஈடுபட்டு வந்த ஏழை எளிய தொழிலாளர்கள் அடிப்படை உரிமைகளாம் கல்லாமை, இல்லாமை மற்றும் அறியாமையில் மிகவும் பின் தங்கியிருப்பது கண்டு மனம் வருந்தி, தன் காலத்திலே இவர்களின் வாழ்வு ஏற்றம் பெற்றிட, ஏதேனும் செய்திட வேண்டுமென்கிற தணியாத தாகமே அவரை மக்கட் பணிக்கு அழைத்தது.

1882 இல் "சென்னை உள்நாட்டினர் சங்கம்" என்கிற அமைப்பு தொடக்கம், பின்பு அண்ணல் காந்தியடிகளின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, காங்கிரஸ் கட்சியிலே இணைந்து 1916 இல் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டபின், காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி, 1916ஆம் ஆண்டு "தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்" என்கிற ஒரு புதிய அமைப்பினைத் தொடங்கினார். அதன் நீட்சியாக, நீதிக் கட்சியினைத் தோற்றுவித்து, அதன் தலைவராகவும் பொறுப்பேற்று வழி நடத்தினார். மேலும், 'நீதி' (ஜஸ்டிஸ்) என்ற பெயரில் ஆங்கிலச் செய்தி நாளிதழ் ஒன்றையும்,. பின்னர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் கருதி, 1917ஆம் ஆண்டு 'திராவிடன்' என்ற பெயரிலும் தமிழ் தின நாளிதழையும் அச்சிட்டு வெளியிட்டார்.

தன் வாழ்வினையே மக்கட் பணிக்காக அர்ப்பணித்ததோடு, 40 ஆண்டுகளுக்கும் மேலாக அன்றைய சென்னை மாகாணத்தின் மக்கள் பிரதிநிதியாக பணியாற்றி, சென்னை மாநகரத்தின் முதல் மேயராகவும் பதவி வகித்தார். 1920ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நீதிக் கட்சி 98 இடங்களில் வென்று இவரைத் தேடி முதலமைச்சர் பதவி வந்போதிலும் அதனை ஏற்க மறுத்தார். தம் சொந்தச் செலவிலேயே பல பள்ளிகளையும், மாணவர்களின் நலன்கருதி மதிய உணவினையும் வழங்கியதோடு, பல மருத்துவ மனைகளையும் மக்களுக்காக உருவாக்கித் தந்த வள்ளல் பெருமகனாவார்.

மக்கட்ச் செல்வராக வலம் வந்த காலத்தில், நீதிக்கட்சியின் தலைவராக இவர் வகுத்த கொள்கைகளே பின்னாளில் சமூக நீதிக்கு வழிவகுத்தது என்றால் அது மிகையில்லை. அன்னாரின் அளப்பரியச் சேவைகளைப் பாராட்டி, வெள்ளுடை வேந்தருக்கு 1909ஆம் ஆண்டு ராவ் பகதூர் பட்டமும், 1919ஆம் ஆண்டு திவான் பகதூர்

பட்டமும், 1921ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசின் மிக உயரிய விருதான 'சர்' பட்டமும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். பின்னாளில். இன்றைய சென்னை மாநகர் மேம்பட அடித்தளமிட்ட வெள்ளுடை வேந்தரின் நினைவாக, புதிதாக உருவாக்கப்பட்ட 'தியாகராய நகர்' என அன்னாரின் பெயர் சூட்டி பெருமை சேர்க்கப்பட்டது.

மக்கள் மனதில் நீங்காமல் நிலைத்திட்ட வெள்ளுடை வேந்தர் 1925ஆம் ஆண்டு தனது 73ஆவது வயதில் இயற்கை எய்தினார். பேரறிஞர் பெருந்தகை அவர்கள் "சர் தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு தலைமை பூண்டு, அவர்களின் தன் உணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றிடப் பாடுபட்டு, சமுதாயத் துறை, பொருளாதாரத் துறை, அரசியல் துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட எந்நாளும் உழைத்திட்ட நற்பண்பாளராவர்" என்று பெருமையோடு போற்றியுள்ளார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் "அந்தோ தியாகராஜ மலையுஞ் சாய்ந்ததோ! இராஜ கம்பீரத் தோற்றமும், திருநீற்றொளியும், சிங்கநோக்கும், மலர்ந்த முகமும், பீடுநடையும், அஞ்சா நெஞ்சும், ஆவின் இயல்பும் உடைய ஒரு பெரு வடிவாம் எமதாருயிர்த் தியாகராஜரை இனி என்றே காண்போம்! ' என்று தனது இரங்கற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2001 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை தியாகராயர் நகரில் சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கம் திறக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு அன்னாரின் நினைவாக 'அஞ்சல் தலை' வெளியிட்டு ஆற்றிய உரையில், "இன்றைய தினம் ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏற்றம் பெற்றிட பல்வேறு சமூக நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திட வித்திட்ட திராவிட இயக்க மும்மூர்த்திகளாம் தியாகராயர், நடேசனார், நாயர் ஆகியோர் ஆவர் என கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.. தியாகராயர் நகர், தியாகராயர் அரங்கம், தியாகராயர் கல்லூரி இவை வெள்ளுடை வேந்தரின் பெயர் தாங்கிய நினைவு சின்னங்களாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த வெள்ளுடை வேந்தரை நாம் அடுத்த தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்த வேண்டியது நம் கடமை'. தியாகராய பெருமான் மறையவில்லை. திராவிட உரிமையாளர்கள் அனைவரது உள்ளங்களிலும் வாழ்கிறார்! வாழ்ந்து கொண்டே இருக்கிறார்!" என்று பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசின் சார்பில் 'வெள்ளுடை வேந்தர்' சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர்அலுவலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in